தனி இதழ் ஒரு அணு
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 173

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ 24—0—0
6 மாதம் ரூ 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ 30—0—0
6 மாதம் ரூ 15—0—0
3 மாதம் ரூ 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: ஐப்பசி 19 புதன் (4—11—53) ★ ★ ★ வெளியூர்: ஐப்பசி 20 வியாழன் (5-11-53)

காங்கிரஸ் அமைச்சர் வீராப்பு!

பெற்ற சுதந்திரத்தை மெய்ப்பிக்க அன்னியர் வகுத்த நல்ல முறைகளையும் நாசம் செய்வதா?

நில வரி வசூல் பொறுப்பை கைமாற்றுவது பேராபத்தாக முடியும்

அதிகாரம் இருக்கிறது என்பதற்காக, அதை வீணில் செலவிடக் கூடாது

சர்க்கார் அதிகாரி அளிக்கும் அறிவுரை

"பிரிட்டிஷார், இந்த நாட்டை ஆண்டபோழுது. அவர்கள் ஏற்படுத்திய எல்லா ஏற்பாடுகளையும் தீவிரமாக மாற்றித் தொலைத்துக் கட்டுவதின் மூலமே, தங்களுக்குக் கிடைத்துள்ள அரசியல் சுதந்திரத்தை மெய்ப்பித்துக்கொள்ள முடியும் என்ற கருத்து பரவலாக இருந்துவருகிறது. இது விவாதத்திற்குரிய விஷயம்; ஏனென்றால் ஏதோ ஒரு வழியை பிரிட்டிஷ் சர்க்கார் பின்பற்றியது, அது சந்தேகத்திற்குரியது. எனவே, தங்களுக்கு விடுதலை கிடைத்திருப்பதைக் காட்டிக்கொள்ள வேண்டுமானால், அதே விஷயத்தைச் சாதிக்க வேறு நடைமுறையைப் பின்பற்றியாக வேண்டும்."

"அரசியல் விடுதலை கிடைத்தது முதல், அதற்குச் சில காலம் முதல் கொண்டும் இந்த நில வரி வசூல் முறையில் மாற்றஞ் செய்ய பலவிதமான முயற்சிகள் செய்யப்பட்டன. பலவித முறைகள் கூறப்பட்டன. இவைகளில் ஒன்றுதான், கிராமப் பஞ்சாயத்துக்களிடம் நில வரி வசூல் பொறுப்பை ஒப்படைப்பது என்பது."

"நில வரியை 50 சதவிகிதம்கூட கிராமப் பஞ்சாயத்துக்களால் வசூல் செய்ய முடியாது என்பதை திட்டவட்டமாக, உறுதியாகக் கூறுகிறேன்."

"மற்றவர்கள் செய்தார்கள் என்பதற்காகவும், மாற்றுவதற்கான அதிகாரம் தம்மிடம் இருக்கிறது என்பதற்காகவும், ஒரு விஷயத்தில் மாற்றம் செய்யக் கூடாது. ஒரு துறையில மேற்கொள்ளும் குறிப்பிட்ட மாற்றத்தினால, நிலைமை சிறப்புறுமா என்றே நோக்க வேண்டும்."

"உங்களுடைய பலத்தைச் சேமித்து, ஒதுக்கி வையுங்கள்; உங்களுக்கு உரிமை இருக்கிறது என்பதற்காக அந்தப் பலத்தை வீணாக்கி, வியயமாக்காதீர்கள்."

—இவ்வாறு சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர் மன்றத்தில், சென்னை சர்க்காரின் நிலவரி இலாக்கா அலுவலராக இருக்கும் சோபூர் எம். கே. வெ[illegible] அவர்கள் ஒரு அரிய சொற்பொழிவாற்றினார். அதில், அவர் கூறப்பட்டுள்ளதில் சிலவற்றை சுருக்கித் தந்துள்ளோம்.

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:—

இதற்கு எடுத்துக்காட்டாக, நிலவரி முறையை எடுத்துக்கொண்டு பார்ப்போம். "இந்த ஒழுங்கான முறையை நமக்கு அவர்கள் தானமாக விட்டுச் சென்றார்கள்; இதை மேலும் சிறந்ததாக்குவதென்பது கடினமானதாகும்."

பிரிட்டிஷ் சர்க்கார், நிலவரி வசூல் முறையை சிக்கல் போக்கி செம்மைபடுத்தி இருக்கிறார்கள். அந்தக் காலத்தில், சர்க்கார் வருமான இனங்களில் இந்த நிலவரி தான் முதன்மையானதாகும். இம்முறையின் மூலம், மொத்த நிலவரியில் 99 சதவிகிதம் வசூல் செய்வதில் வெற்றி கிடைத்திருக்கிறது."

"நிலவரியை 50 சதவிகிதம் கூட கிராமப் பஞ்சாயத்து[illegible]களால் வசூல் செய்ய முடியாது என்பதை திட்டவட்டத்துடன் உறுதியாகக் கூறுகிறேன்."

இதை, இவ்வளவு வலியுறுத்திக் கூறுவதற்கே காரணம், 'நிலவரிக் கொள்கையில் [illegible]

கல்லக்குடி வழக்கு

தோழர்கள் வாக்கு மூலங்கள் பதிவு ஆரம்பம்

★

திருச்சி, நவ. 2—

இன்று, கல்லக்குடி சப் டிவிஷனல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில், தோழர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இன்றிலிருந்து தோழர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படுகின்றன. முறையே, தோழர்கள் கண்ணதாசன், வடிவேலு, சண்முகம், தங்கசாமி ஆகியோரது வாக்குமூலங்கள் பதிவு செய்தாகி விட்டது.

'முன்ஷி'யார் கொளுத்தப்பட்டார்

200 பேர் கைது

லக்னோ, நவ. 3—

லக்னோவில் மாணவர்கள் கிளர்ச்சி பாட்டம் இன்று தொடர்ந்து நடைபெற்றது. [illegible] தெருக்களின் வழியாக இழுத்துச் செல்லப்பட்ட கொடும்பாவிகளை, இன்று லக்னோ [illegible] முன்பு தகனம் செய்தார்கள்.

கவர்னர் முன்ஷி, உ. பி போலீஸ் அமைச்சர் சம்பூர்ணானந்த், [illegible] அமைச்சர் சி. பி. குப்தா முதலியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டது இரசதகன நிகழ்ச்சிக்கு [illegible] மாணவ மாணவிகள் வந்திருந்தனர்.

அசம்பாவித நிகழ்ச்சிகளை தடுக்கும் நோக்குடன், நேற்று மாலையிலிருந்து இன்று பகல் வரையில் 200 பேர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

மிகப் பெரிய நகரமான லக்னோ, [illegible] சட்டத்தால் பயங்கரமாகக் காட்சி தருகிறது.

கட்ஜுவுக்கு கருப்புக் கொடி வரவேற்பு!

கோட்டயத்தில் நிகழ்ச்சி

கோட்டயம், நவ. 3—

திருவனந்தபுரத்திலிருந்து 96 மைல் தூரத்திலுள்ள கோட்டயத்திற்கு மத்திய அரசாங்க போலீஸ் மந்திரி டாக்டர் கே. என். கட்ஜு நேற்று வந்தபோது, அவருக்கெதிராக மாபெரும் கருப்புக்கொடி நிகழ்ச்சி நடைபெற்றது. அவர்களைப் போலீசார் தடியெடுத்து தாக்[illegible]

சென்னையில் டிராம்

சர்க்கார் நடத்த இயலாதென அமைச்சர் அறிவிப்பு

சென்னை, நவ. 3—

தொழிலாளர்களின் பிரதிநிதிகள் [illegible] சர்க்காரே ஏற்று நடத்த வேண்டும் என்று [illegible] போக்குவரத்தை மீண்டும் துவக்கவேண்டும் என்று தொழிலாளர் தலைவர் [illegible] கோட்டையில் மந்திரிகள் டாக்டர் பி. சுப்பராயன், [illegible] ஆகியோரை விசாரித்தனர்.

கூட்ட முடிவில் நிதி மந்திரி சுப்ரமணியத்தை நிருபர்கள் கேட்டபோது, "டிராம்வே போக்குவரத்தை சர்க்கார் நடத்த இயலாதென்றும், வேறு [illegible] நடத்த முன்வந்தால் அவர்களுக்கு [illegible] பரிசீலிக்கப்படும்" என்றும் அவர் சொன்னார்.

நிதி அமைச்சரின் நீலிக் கண்ணீர்

சம்பளம் போதவில்லையாம்! செலவு அதிகமாகிறதாம்!!

கோவை, நவ. 3—

"நான் வக்கீல் வேலை பார்த்து வந்தபோது [illegible] இப்போது, அதைவிடக் குறைவான வருமானம் கிடைக்கிறது. எனக்குக் கிடைக்கும் சம்பளத்தை விட செலவு அதிகமாகிறது: [illegible] மாதம் ரூ 50 தருகிறேன்."

—இவ்வாறு, சென்னை நிதி அமைச்சர், கோவை [illegible] கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர், மேலும் கூறியதாவது:
"என் [illegible] பின் [illegible] [illegible]"

அமைச்சர் சுப்பிரமணியத்தின் மாதச் சம்பளம் ரூ. 1,500 என்பதும், [illegible] வேறு [illegible] என்பதும் [illegible] [illegible].

தொழிலாளர் சங்கங்களின் போட்டாபோட்டியின் விளைவு

சிலருக்குக் காயம்: ஐவர் கைது!

கோவை, நவ. 2—

கோவை மாவட்ட பஞ்சாலை தொழிலாளர் சங்கத்திடமும், கோவை மில் முதலாளிகளுக்கும் போனஸ் விஷயமாக ஏற்பட்ட உடன்பாட்டிற்குப் பிறகு, மேற்படி தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸில் இணைந்துள்ள தேசிய பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் இடையே [illegible] [illegible] ஏற்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.

[illegible] இரண்டு [illegible] தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் [illegible] தாக்கப்பட்டு, அச்சங்க செயலாளர் [illegible] உட்பட சிலருக்குக் காயம் ஏற்பட்டது. இதுபற்றி மாவட்ட தொழிலாளர் சங்கத்தின் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்க கமிட்டிக் கூட்டத்தில் பேசிய ஒருவர், மாவட்ட பஞ்சாலை தொழிலாளர் சங்கத் தலைவர் [illegible] [illegible] சங்க தொழிலாளர்கள் [illegible] கூறப்படுகிறது.

தேசிய சங்கத்தைச் சேர்ந்த [illegible] பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 5 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாறுதல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு சில சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை சர்க்கார் இப்பொழுது ஆராய்ந்துகொண்டு இருந்து வருகிறது. குழு அறிக்கையில், இப்பொழுதுள்ள நிலவரிக்குப் பதிலாக விவசாய வருமான வரியைப் புகுத்துவது என்ற யோசனை மிக முக்கியமானதாகும். இத்திட்டத்தின் [illegible] காட்ட, இந்த மாற்றம் செய்வது தேவைப்படுகிறது.

ஈ. வி. கே. சம்பத் பதவியை நீடிக்க ஈரோடு நகரசபை முடிவு

காங்கிரஸ் உறுப்பினர்களும் எதிர்க்கவில்லை

ஈரோடு, நவ. 3—

ஈரோடு நகரசபைக் கூட்டம் தலைவர் என். மீனாட்சிசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, நகரசபை உறுப்பினராக இன்றுமிருக்கும் தி. மு. கழகத் தலைவர் [illegible] ஈ. வி. கே. சம்பத், தொடர்ந்து 3 மாதக் கூட்டங்களுக்கு வராதது பற்றி விவாதிக்கப்பட்டது.

விவாதத்தின் இறுதியில், காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட அனைவரும் ஈ. வி. கே. சம்பத் தொடர்ந்து பதவியிலிருக்க ஒப்புதல் தந்தனர்.

ஜவர் சிறையில்
இன்று
65-வது நாள்

நம் நாடு
தி.மு.கழக இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை: 4—11—1953 புதன்

மனமறிந்த மாபாதகம்!

கடந்த ஆறு திங்களுக்கு அதிகமாக, சென்னை டிராம் கம்பெனியில் ஈடுபட்டிருந்த 1600 தொழிலாளர் குடும்பங்கள் வேலையின்றி, வாழ வகையின்றி வேதனைபட்டுக்கொண்டு இருப்பது உலகறிந்த ரகசியம். சர்க்கார் தாமாக முன்வந்து இந்தப் பாட்டாளி மக்களுக்கு ஏதாவது வாழ வகைதேடிக் கொடுத்திருக்க வேண்டும் ஆச்சாரியார் சர்க்காருக்கு அந்த இரக்க சிந்தையும் கிடையாது பொறுப்புணர்ச்சியும் கிடையாது என்பதை அனைவரும் அறிந்தே இருக்கிறார்கள்.

ஏழைப் பாட்டாளி மக்களைப் பட்டினிபோட்டு வதைக்கப் பதைக்கச் சாகவிடுவதென்பது, பொதுவாகக் காங்கிரஸ் சர்க்காருக்குள்ள ஜன்ம குணங்களில் ஒன்று என்பது வெளிப்படை. குறிப்பாக ஆச்சாரியாருக்கு, அமைச்சர் என்ற அதிகார தோரணையில், ஏழைகளுக்குத் தீங்கு செய்வதென்பதில் கட்டுக்கடங்காத ஆர்வமும் உண்டு; நல்ல பயிற்சியும் உண்டு.

அந்தக் காலத்தில், அதாவது, வெள்ளையர் அதிகார காலத்தில், 1938-ல், ஆச்சாரியார் அமைச்சராக இருந்த போதே, பாட்டாளிகளை வேலையிலிருந்து வறுமைக் குழியில் தள்ளி, அவர்களைப் பட்டினிக்கும், பஞ்சத்திற்கும் பலியாக்கி வேடிக்கை பார்ப்பதில், அவர் மங்காத புகழ்பெற்றிருக்கிறார். அவர்களுடைய வேதனை, ஆச்சாரியாருக்கு சிறு விளையாட்டு. அவர்களுடைய கதறல், ஆச்சாரியாருக்கு இருதய கீதம். அக்கால வரலாறு, இந்த உண்மையைத்தான் இன்றும் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது.

ஆச்சாரியார் சர்க்காருடைய நிர்வாக ஊழலின் காரணமாக, இன்றில், பிற காரணத்தால் நடைபெறும் குற்றங்கள் பட்டப்பகலில் பகிரங்கமாகவும், சிலர் குற்றம் செய்வதற்குப் பதில், பலர் என்ற நிலைமையும், அன்றும் - இன்றும் - என்றும் பெருகிக்கொண்டே வருவது கண்கூடு. மதுவிலக்கின் எதிரொலி இது. மதுவிலக்கு எவ்வளவு முக்கியமானதோ, அதைப்போலவே, அதை ஒழுங்காக அமுல் நடத்தி வெற்றி காணுவதும் முக்கியம் என்று சொல்லத் தேவையே இல்லை.

இத்துறையில், சர்க்கார் அதிகாரிகள் காட்டும் மனப்பாவத்தினால், காணமால் பிழைத்துவந்த ஏழை எளியவர்கள்கூட, இன்று சட்டத்தை மீறும் கிரிமினல் குற்றம் புரியும் இழிமக்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இதைக் கள்ளை ஒழித்த தென்னாட்டு சோட்டா காந்தியார், கள்ளிறக்கும் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஏழைப் பாட்டாளிகளுக்கு, பட்டினி கிடக்கும் சாலைகளைப் பதிமோட்டாமல் சமாதானமாக வாழ்க்கை நடத்த அவர்களுக்கு வழிவகை செய்யத் தவறி விட்டார். இந்த உண்மையை நாம் எடுத்துக் காட்டுவதற்குக்கூட சில அரசியல் குருட்டர்கள் கவிழ்ந்து சீறிக் கொள்ளுவர்கள். கள்ளிறக்குவோர் கஷ்டம் பற்றிக் கூற நமக்கென்தான் 'காபிரைட்' என்று, அந்த அரசியல் தான்தோன்றிகள் தப்பட்டம் அடிக்கக் கிளம்பினாலும் கிளம்பக்கூடும். நாமும் சர்க்காருக்கு வரியாகப் பணத்தைக் கொட்டி அழுகிறோம். எதுபற்றியும் நமக்கும் கேட்க உரிமை இருக்கிறது என்பதை அந்த அரசியல் கடுகுள்ளத்தவர் உணர்ந்திருப்பது நல்லது.

அடுத்தது கூனி மில் விவகாரம். லார்ட் எர்ஸ்கின் தலைமையில், ஆச்சாரியார் பிரதமராக இருந்த அக்காலத்தில் தான், கூனி ஆலை மூடு விழா வெற்றிகரமாக நடைபெற்றது. அப்பொழுது, பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி வீதியில் விரட்டப்பட்டார்கள். அதை கண்டும் ஆச்சாரியார் சர்க்கார் அசைந்து கொடுக்கவில்லை. அந்தப் பாட்டாளிகளின் அரை வயிற்றுச் சோற்றுக்கும் வழி செய்யவில்லையானாலும், சாதாரண ஆறுதல் மொழிகூட ஆச்சாரியார் சர்க்காரிடமிருந்து வெளிப்பட்டிருக்கவாவது வெளிவரவில்லை. ஆச்சாரியார் சர்க்காருக்கும், பொதுமக்கள் நலன்களுக்கும் எவ்வளவு தொடர்பு உண்டு என்பதற்கு, இந்த இரண்டைக் காட்டிலும், வேறு எடுத்துக் காட்டுகள் தேவை இல்லை என்று கருதுகிறோம்.

ஏழைப் பாட்டாளி மக்களை, வாழாவெட்டிகளாக்கி, வீதியில் விரட்டுவது ஆச்சாரியார் சர்க்காரின் பரம்பரைப் பண்பு என்பதை மேற்குறித்த இரண்டு நடைமுறைகள் மூலம் மக்கள் உணர்ந்து கொள்வார்கள் என்றே நம்புகிறோம். இங்கு,

டிராம் கம்பெனியை நிர்வகித்துவரும் பொறுப்பில் உள்ள வெள்ளை முதலாளி, மீண்டும் டிராம் ஓட்டுவதற்கு வழி செய்வதற்காக, சென்னை சர்க்காரை சில லட்சம் ரூபாயைக் கடனாகக் கேட்டார். சொந்த இலாபத்தைக் கருதித்தான் வெள்ளை முதலாளி முனைந்தார் என்றாலும், இந்த முனைப்பில் 1,600 தொழிலாளர்களின் நலன்களும் இணைந்து கிடப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. வெள்ளை முதலாளியின் கோரிக்கைக்கிணங்கி, டிராம் மீண்டும் ஓடுவதின் மூலம், தொழிலாளர் குடும்பங்களைப் பட்டினிப் பேராபத்திலிருந்து ஆச்சாரியார் சர்க்கார் கைகொடுத்துத் தூக்கி இருக்கலாம். ஆனால், அந்த வெள்ளையருக்கு இருந்த மதி நுட்பத்தைக்கூட ஆச்சாரியார் சர்க்காரிடம் நாம் எதிர்பார்க்க முடியவில்லை. ஆச்சாரியார் சர்க்கார், வெள்ளையரின் கோரிக்கைக்குக் கையை விரித்து விட்டது.

இரண்டாம் முயற்சியாக, டிராம் தொழிலாளர்களே தங்களுடைய சேமிப்பு நிதியில் இருந்து பண உதவி செய்வதாகவும், நிதி பற்றாக் குறையை சர்க்கார் கடன்கொடுத்து ஈடுசெய்யுமாறும் ஓர் சிறந்த கோரிக்கையை டிராம் தொழிலாளர்கள் வெளியிட்டனர். அதற்கும் ஆச்சாரியார் சர்க்கார் கையை அலட்சியப்படுத்தி விட்டுவிட்டது.

காங்கிரஸ் கட்சியிலேயே தம்மை ஒரு பிரபலஸ்தராகக் கருதிக்கொண்டு இருக்கிறவரும், இப்படிக் கூறிவருகிறவருமான நண்பர் செங்கல்வராயன் அவர்கள் டிராம் தொழிலாளர் விஷயத்தில் அக்கறை காட்டி, மீண்டும் டிராம் ஓட அரிய முயற்சியில் ஈடுபட்டார். நண்பர் போன்றவர்கள், ஆச்சாரியார் சர்க்காரில் தமக்குத் தனிப்பட்ட முறையில் உள்ள சொந்த செல்வாக்கை உபயோகப்படுத்தி, எடுத்த காரியத்தை வெற்றியாக முடிப்பார் என்று, நாம் உண்மையிலேயே நம்பி மகிழ்ந்திருந்தோம். அவருடைய கோரிக்கையையும் ஆச்சாரியார் சர்க்கார் அலட்சியப்படுத்திவிட்டு, தன் முனைப்புப் போக்கிலேயே போய்க் கொண்டிருப்பது வருந்தத்தக்கது மட்டுமல்ல—கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

சொந்தக் கட்சியினர் முயற்சியையும் துச்சமாக மதிக்கிறது, எதிர்க் கட்சியினர் முயற்சியை மேற்கொண்டாலோ அடக்க ஒடுக்க சட்ட புத்தகங்களைத் தேடுகிறது ஆச்சாரியார் சர்க்கார்! சர்வாதிகாரப் போக்கே யல்லாது இது ஜனநாயகப் போக்காகாது!

இந்தத் தருணத்தில், டிராம் தொழிலாளர்களுடைய கஷ்டத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம் என்று ஆறுதலும், அனுதாபமும் கூறுவதைத் தவிர, இந்தக் காலக் கட்டத்தில் நாம் வேறு என்ன செய்ய இருக்கிறது?

அல்லாடி 'ஆத்மா' சாந்தி அடைய ஆச்சாரியார் காணிக்கை!

அய்யரின் மைத்துனர்—சம்மந்தி உமாமகேஸ்வர அய்யருக்கு நீதிபதி பதவி

இது 'வகுப்புவாதமல்ல!' ஆச்சாரியாரின் தேச சேவை!

சென்னை, நவ. 3—

திரு. உமாமகேஸ்வர அய்யர் அவர்கள், காலஞ்சென்ற அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்களுடைய மைத்துனரும், சம்பந்தியுமாவார். அவர் சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட இருக்கிறார்.

உடல்நலக் குறைவு காரணமாக இம்மாத மத்தியில் பதவியிலிருந்து விலக இருக்கும் நீதிபதி ராகவராவுக்குப் பதிலாக அட்வகேட் என். இராஜகோபாலய்யங்கார் ஐகோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக ஆதார பூர்வமான தகவல் கிடைத்துள்ளது. அவர் இம்மாதம் 23-ந் தேதி பதவியேற்பார்.

டிசம்பர் மத்தியில் ஓய்வு பெறப்போகும் நீதிபதி டி. எஸ். வெங்கடராமன் ஸ்தானத்தில் உமாகேஸ்வரய்யர் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அல்லாடி கிருஷ்ணசாமி அய்யருடன், ராஜகோபாலய்யங்காரும் உமாகேஸ்வர அய்யரும் அட்வகேட்டுகளாகப் பணியாற்றியவர்கள்.

மாணவர் உலகில்
மாசு படிகிறது

கான்பூரில் நாசவேலை

கான்பூர், நவ. 2—

இலட்சுமணபுரி மாணவர்களின் கிளர்ச்சிக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக பூரண ஹர்த்தால் கான்பூர் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

கான்பூரில் இன்று கலவரங்கள் ஏற்பட்டன. மாவட்ட நீதிமன்றம் புகுந்து அங்குள்ள பொருள்களுக்கும் சேதம் விளைவித்ததாகத் தெரிகிறது. பஸ்கள் தாக்கப்பட்டன, பிரயாணிகள் காயப்படுத்தப்பட்டனர்.

சில இடங்களில் கடைகள் சூறையாடப்பட்டதாகவும், நெருப்பு வைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. கார்க் குடிலர்கள் பலாத்காரமாக அகற்றப்பட்டன.

புதிய அணைக்கட்டுகள்

சென்னை, நவ. 3—

இன்னும் மூன்று மாதங்களுக்குள், கோவை மாவட்டத்திலுள்ள அமராவதி அணைக்கட்டையும், மதுரை வைகை அணைக்கட்டையும் கட்டுவதென சர்க்கார் முடிவு செய்துள்ளது.

ஆளவந்தார்களின் 'மந்தி மதிக்கு' மறைமுகக் கண்டனம்

கல்வித் துறையில் சட்ட திட்டங்களை உருவாக்க நிபுணர்கள் தேவை

சிதம்பரம், நவ. 3—

இந்நகரில் உள்ள இராமகிருஷ்ண வித்யாசாலை ஆசிரியர்கள் சங்கம், சென்ற தங்கள் முடிவில், 'கல்வி வாரம்' கொண்டாடியது. இரண்டாம் நாள் நடவடிக்கையில் தலைமை வகித்த, வித்யாசாலை நிர்வாகக் குழுவின் தலைவராக உள்ள ஜி. டி. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள், தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:—

"ஆளும் கட்சியினர் அடிக்கடி குழப்பிவிட்டு, தங்கள் மனம் போனபடி போக்கில் கல்வித் துறையில் குழப்பம் விளைவித்து வருவதைத் தவிர்க்க, சிறந்த கல்வி நிபுணர்களைக் கொண்டு கல்வித் துறைக்கான ஒழுங்கான சட்டதிட்டங்களை உருவாக்க சர்க்கார் உடனடியாக முன்வர வேண்டும்."

என்ஜின்கள் வரவழைக்க ஏற்பாடு

புது டில்லி, நவ. 2—

நூறு கோடி ரூபாய் பெறுமான 750 என்ஜின்களை வரவழைப்பதற்கான ஏற்பாட்டை ரயில்வே போர்டு செய்து வருகிறது. ஜெர்மனி, ஆஸ்திரியா, ஜப்பான் ஆகிய இடங்களிலுள்ள கம்பெனிகள் விலைப்புள்ளி அனுப்புமாறு கேட்கப்பட்டிருக்கின்றன. இதைச் செய்தியை ரயில்வே போர்டு மெம்பர் பி. சி. பட்டாச்சாரியார் தெரிவித்தார்.

இருவருக்கு இருவார சிறை

சென்னை, நவ. 3—

சிறுபாக்கப் பருத்தி குடோன் வழக்கில், 6-வது மாகாண மாஜிஸ்டிரேட் சம்பந்தம், இரு எதிரிகளுக்கு தலா இரண்டு வார சிறைத் தண்டனை விதித்தார்.

உருவாகிறது!

சென்னை, நவ. 4—

ஆச்சாரியாருக்கு எதிராகக் கையெழுத்துச் சேகரிப்பு இயக்கம் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

ஆச்சாரியாரின் போக்கினை எதிர்த்து, சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியினரின் கையெழுத்துக்கள் 80 அல்லது 85 சேர்ந்தவுடன், ஆச்சாரியாருக்கும், நேருவுக்கும் தகவல் தெரிவிக்கப்படுமென்றும், இச்சிக்கல் இதுடன் முடிவடைந்துவிடவில்லை யென்றும் தெரிகிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை

கராச்சி, நவ. 2—

ஜனநாயகமற்ற முறையில் முடிவுகள் செய்யப்படுவதைக் கண்டிக்கும் வகையில், பாக். அரசியல் நிர்ணய சபையிலிருந்து காங்கிரஸ் மெம்பர்கள் வெளியேறினர். வெளியேறுமுன் அக்கட்சியின் தலைவரான சுரேந்திர சட்டோபாத்யாயா, இஸ்லாமிய சட்டமுறை பற்றி, அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுவதும், வற்புறுத்தப்படுவதும் நாங்கள் இச்சபையில் தொடர்ந்திருப்பதை கலவரப்படுவதாக ஆக்குகிறது என்று கூறினார். மைனாரிட்டி வகுப்பினரான நாங்கள் இச்சபையில் பங்கெடுத்துக் கொள்வதினால் பயனில்லை என்றும் அவர் சொன்னார்.

கல்லக்குடி அறப்போர்
★
இன்று
114-வது நாள்
★
கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்
இன்று
113-வது நாள்

பெண் அமைச்சர் பிரச்னையில் நேருவின் மௌனமும், சி. ஆர். செய்யும் புரளியும்!

சேலம் தொகுதியில் நின்று வெற்றி பெற ஆச்சாரியார் ஒப்பாததின் மர்மம் அம்பலம்!

காங்கிரஸ் பணியாளர்களை 'வகுப்புவாதிகள்' என்று சி. ஆர். கூறுவது மன்னிக்க முடியாத குற்றம்!

தியாகத்திற்கே மாசு கற்பிக்கும் இழி குணத்தை இனியும் சகித்துக்கொள்ள முடியாது

காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்கள்மீது ஆச்சாரியார் பாடிய வசைக்கு டாக்டர் வரதராஜலு விடுக்கும் அறை கூவல்:—

வருத்தம்

"சென்னைச் சட்டசபைக் காங்கிரசுக் கட்சியினரால் பண்டித நேருவிடம் சமர்ப்பிக்கப் பட்டது பற்றி, சென்னை பத்திரிகைகளில் வெளியான தகவல் பற்றி, பத்திரிகைகளுக்கு அறிக்கை அனுப்ப சென்னை முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார் முன் வந்ததைக் கண்டு நான் வருந்துகிறேன்.

கைவிடப்பட்டார்!

பத்திரிகைகளுக்கு விரைந்தோடி அவர் அறிக்கை வெளியிட்டிருக்கும் இவ்விடயத்தில் மட்டும், ஆச்சாரியாரின் கூர்த்த அறிவு, அவரைக் கைவிட்டது, வியப்பளிக்கிறது.

இம்மாகாணத்தின் நலனைக் கருதி, பண்டித நேரு, இரகசியமாக வைத்துக் கொண்டுள்ள விடயம் இதுவாகும்.

யார் வகுப்புவாதி?

தனது நிர்வாகத்திற்கெதிராக வளர்ந்துவரும் வெறுப்புணர்ச்சியைக் குறைத்து மதிப்பிட்டு, நேருவுக்கு அனுப்பப்பட்ட இம்மனுவின் நோக்கத்திற்கு வகுப்புவாத நிறம் கொடுத்து, தமது பழைய நண்பர்களின் புகாரை ஒதுக்கித் தள்ள முயல்கின்றார். ஆனால் யார் வகுப்புவாதி என்பதை நாடு விரைவில் தெரிந்து கொள்ளும்.

மக்கள் ஒப்பார்

வகுப்புவாதம் என்னும் போலிக் காரணத்தைக் காட்டி, ஆச்சாரியார் இந்தச் சிக்கலை அலட்சியப் படுத்த முயற்சி செய்கிறார்; ஆனால், மக்கள் இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

காட்டிக்கொடுத்தல்

'பதவி வேட்டை போன்றவைகளை' பற்றி ஆச்சாரியார் குறிப்பிட்டதிலிருந்து, தமது சொந்தக் கட்சியினர் மீதே குற்றம் கூறுகிறார்.

தியாகத்துக்குச் சொட்டு

ஆச்சாரியாரின் நிர்வாக முறையைக் கண்டு இப்போது அதிருப்தியடைந்துள்ள காங்கிரசுக் கட்சியின் உறுப்பினர்களில் சிலர், சுதந்திரப் போராட்டத்தில் சொல்லொணாத் தியாகங்களைப் புரிந்தவர்களாவர்.

காங்கிரசின் நேர்மையைக் காப்பாற்றுவதற்காக இவர்கள் செய்துவரும் முயற்சிகளுக்கு, பதவி வேட்டையைக் காரணமாகக் காட்டுவது, இவர்களின் தியாகங்களையே புண்படுத்துவதாகும். இதனால் மற்ற அரசியல் கட்சியினர் எள்ளி நகையாடுவதற்குரிய பொருளாக ஆச்சாரியார் இவர்களை ஆக்கியுள்ளார்.

வெறும் மாயு!

இந்தச் சிக்கலைப் பெருந்தன்மையுடனும், சமரச மனோபாவத்துடனும் ஆராய்ந்து விரைவாகப் பதில் அனுப்பியதற்காக நேருவுக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

யோக்கியதை தெரியும்

30 ஆண்டுகளுக்கு மேலாக சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் இணைந்து நின்று பணியாற்றிய ஆச்சாரியாரும், நானும் ஒருவரைபொருவர் பூரணமாக அறிந்தவர்கள்.

உதட்டு உறவு!

பொதுச் சிக்கல்கள், கொள்கைகள் போன்றவைகளில் எங்களுக்குள்ள கருத்து வேற்றுமைகளுக்கு எதிராக அவர்பால் எனக்குள்ள அன்பும், மரியாதையும் எப்பொழுதும் என்மனத்தில் பதிந்து கிடக்க வந்திருக்கிறது.

குருகுல நினைப்பு

இந்தியாவின் இப்பகுதியைப் பொறுத்த இந்த விடயத்தில், எங்களுடைய வாழ்க்கையின் கடைசிக் காலத்தில், போராடித் தீரவேண்டிய கட்டுப்பாடுடையவர்களாகியுள்ளோம்.

அறிவார்!

எந்தக் காலத்திலும் அதிகாரத்திற்கோ, பதவிக்கோ, செல்வாக்கு பெறவோ நான் விரும்பியதில்லை என்பதை ஆச்சாரியார் நன்கு அறிவார்.

உதறினர்!

நான் போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதியிலே நின்று வெற்றி பெற்று, சட்டசபைத் தலைமைப் பதவியை ஆச்சாரியார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக, சென்னை சட்டசபையின் உறுப்பினர் பதவியைக் கைவிடுவதாக நான் அவரிடம் கூறியதை, அவர் இன்றும் நினைத்திருக்கலாம்.

வடிகட்டின பொய்!

பெண் அமைச்சர் நியமன விடயத்திலுள்ள நீதியைப் பற்றி நான் உறுதியாக உணர்ந்திருக்கிறேன். அதிர்ஷ்ட வசமாக, மனுவிற்கு நாம் அனுப்பியுள்ள பதிலில், அமைச்சர் பதவிக்கு ஒரு பெண் நியமனமாகியிருப்பது பற்றி, நேரு குறிப்பிடவில்லை; ஆனால், ஆச்சாரியார் அறிக்கையில், இதுவே பெருஞ்சிக்கலாகக் காட்டப்பட்டிராவிட்டால், இதில் சம்பந்தப்பட நான் இணங்கியிருக்கமாட்டேன் என்பதை நான் நிச்சயமாகக் கூறுகிறேன். இந்த 'அறிவீனமான' செயலில் நானும் சிக்கிக்கொண்டிருப்பதாக ஆச்சாரியார் கூறியிருப்பதைக் கண்டு நான் ஆச்சரியமடைகிறேன்.

அறைகூவல்

தனது சொந்தக் கட்சியினர்களுக்கே, ஆச்சாரியார் ஓர் அறைகூவலை விடுத்திருக்கிறார். மனுவில் கையொப்பமிட்டுள்ளவர்களின் சார்பாக, அவர் விரும்பினால், இந்த அறைகூவலை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

மக்கள் கூறட்டும்

ஆச்சாரியார், இந்த விடயத்தில், உண்மையை உணரமறக்காமலிருப்பாரானால், அவருடன் சேர்ந்து, நாட்டு மக்களிடம் சென்று, எங்களுடைய மனுவில் கண்டுள்ள அறிக்கையின் உண்மையை நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன்."

புதிய ஒரு ரூபாய் நோட்டுகள்

★

புதுடில்லி, நவ. 4—

தற்போது பழக்கத்தில் இருந்துவரும் பழுப்பு நிற ஒரு ரூபாய் நோட்டுகளுக்குப் பதிலாக, ஊதா நிறமுள்ள ஒரு ரூபாய் நோட்டுகள், இந்திய ரிசர்வ் பாங்கி காரியாலயங்களிலிருந்து கூடிய சீக்கிரம் வெளியிடப்படும் என்று இந்திய சர்க்கார் தெரிவிக்கின்றனர். மேலே கூறப்பட்ட இந்த வர்ண மாறுதலைத்தவிர, நோட்டுகளின் அமைப்பில் எதொரு மாறுதலும் இராது.

கோடம்பாக்கம் தோழர்கள் சிறை புகுந்தனர்

சென்னை, நவ. 2—

26-9-53 அன்று தடையை மீறி நடத்தப்பட்ட கூட்டம் பற்றி, தோழர்மீது தொடரப்பட்ட வழக்கு 30—10—53 அன்று மூன்றாவது மாகாண மாஜிஸ்திரேட்முன் கொண்டு வரப்பட்டது. 41-வது பிரிவின்படி (30 ரூபாய் அபராதமும்) கட்டத் தவறினால், இரண்டுவாரம் காவல் தண்டனையும், 71-வது பிரிவின்படி (10 ரூபாய் அபராதமும்) கட்டத் தவறினால் 5 நாள் காவல் தண்டனையும், அபராதத் தொகையைக் கட்ட மறுத்து சிறை புகுந்தாலும் சொத்து ஜப்தி செய்யப்படும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. அபராதம் கட்டமறுத்து 35-வது வட்ட தலைச் செயலாளர் இளங்கீரன், தோழர்கள் இராமலிங்கதாசன், ஆ. செ. துரைக்கண்ணு ஆகியோர் முகமலர்ச்சியுடன் சிறை புகுந்தனர்.

தோழர் எ. கோவிந்தன் கடுங்காவல் தண்டனை பெற்றார்

கடலூர், நவ. 2—

இரயில் நிறுத்தப் போராட்டத்தில், கலந்துகொண்ட குரப்ப நாய்க்கன் சாவடி தோழர் எ. கோவிந்தனுக்கு, 31—10—53 அன்று 45 நாள் கடுங்காவல்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். தோழர் கோவிந்தன் முகமலர்ச்சியோடு சிறை புகுந்தார்.

ஆச்சாரியார் அற்புதப் படைப்புக்கு கல்வி நிபுணர் தரும் அத்தாட்சி!

புதிய கல்வித் திட்டத்தில் "ஏராளமான குறைபாடுள்ள பிளவுகள் மலிந்துள்ளன!"

நிபுணர்குழு உறுப்பினர் மூஜீம், பங்கு கொள்ளாததின் உண்மை இப்பொழுதுதான வெளியாகிறது

நிபுணர் குழுத் தலைவர் பாருலேகர் குட்டை உடைக்கிறார்

சென்னை, நவ. 3—

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை ஆய்ந்து பார்க்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினர் அறிக்கை, 75 பக்கங்கள் கொண்டதாக உருவெடுத்து இருக்கிறது. இந்த அறிக்கை, கல்வி இலாகா முதல் ஆணையாளர் திருவாட்டி ஓ. சி. சீனிவாசன் அவர்களால் சர்க்காரிடம் சேர்ப்பிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

'பல மாறுதல்கள்' மேற்கொள்வதற்காகக் கூறப்பட்டு இருக்கின்றன. புதிய கல்வித் திட்டத்தில் மலிந்திருந்த 'ஏராளமான குறைபாடு நிரம்பிய பிளவுகளை நிரப்புவதற்கு நிபுணர் குழு முயன்றிருக்கிறது,' என்று, நிபுணர்குழுத் தலைவர், இன்று காலை சென்னையைவிட்டு நீங்கும்பொழுது குறிப்பிட்டார்.

தம்மால் ஆனவரையில் திருத்தங்களைச் சிறப்பாகச் செய்துவிட்டது; இனி அவைகளை அமுல் நடத்த வேண்டிய பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிபுணர் குழு செய்துள்ள திருத்தங்கள் அமுல் நடத்தப்பட்டால், இந்த நாட்டின் எதிர்கால புது அமைப்புக் கல்வி ஆக்கத்திற்குப் பெரிய அளவில் துணை செய்யும் என்றும் அவர் கருதினார்.

நாட்டின் தற்காலத் தேவையை மனதிற் கொண்டு, கல்வி மாற்றத்தை அணுகி இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

நிபுணர் குழுவின் திருத்தச் சிபாரிசு, இப்பொழுது சுற்றுப் பிரயாணத்தில் இருக்கிறது. நிபுணர் குழு உறுப்பினரான தோழர் டே அவர்கள் காரைக்குடியில் இருக்கிறார். மற்றொருவரான டெல்லி மூஜீப் அவர்கள், குழு கூட்டங்களின் பிற்பகுதியில் பங்குகொள்ளவே இல்லை.

ஒருவர் பங்குகொள்ளாத உண்மையை, நமது மாநிலப் பத்திரிகைகள் அனைத்தும் இது வரை இருட்டு அடித்து வந்தன. இப்பொழுதும் குழுவின் தலைவரால்தான் இந்த உண்மை வெளியாயிற்று என்பது கருதத்தக்கது.

★★★★★★★★★★★★

திராவிடத்தில் இந்த வாரம்

★

கருகம்பத்தூர்:
5—11—53
பேசுவோர்:
க. நெடுஞ்சோழன்
ஆ. பொன்னரசன்
பி. ஏ. துரை

★

திருமழிசை:
6—11—53
தலைவர்: கே. சம்பந்தன்
பேசுவோர்:
கே. டி. எஸ். மணி
எஸ். எஸ். தென்னரசு
கோ. இறைமுடிமணி

★

சேலம்:
6—11—53
தலைவர்: எஸ். ஏ. அன்புக்கரசு
பேசுவோர்:
கவிஞர் கண்ணதாசன்
சிற்றுளி சுப்ரமணியம்
எச். வி. சீனிவாசன்

★

சேவூர்:
7—11—53
பேசுவோர்:
ப. உ. சண்முகம்
முகவை ஆர் எஸ். பாண்டியன்
போளூர்—சுப்ரமணியம்

★

ராசிபுரம்:
7—11—53
தலைவர்: பி. சின்னண்ணன்
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி எம் எல் ஏ.
டேபி—கந்தசாமி எம்.பி.
சிற்றுளி சுப்ரமணியம்
கே. பி. கே. ராமசாமி

★

பெங்களூர்:
8—11—53
தலைவர்: சி. என். சாமி
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
மு. சி. வேணு

★

ஆலடிக்கு முவிளா:
8—11—53
தலைவர்: எம். ஆர். முருகையன்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
டி. எம். ராமசாமி
குடந்தை எஸ். கே. சாமி
பேராவூரணி அடைக்கலம்

★

செங்கற்பட்டு:
8—11—53
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
கே. டி. எஸ். மணி

★

சென்னை:
8—11—53 காலை 9 மணிக்கு
தலைவர்: இளம்பரிதி
பேசுவோர்:
காஞ்சில் கி. மனோகரன்
எம். ஜி. இராமச்சந்திரன்
இடம்: கோகலே மண்டபம்
(நுழைவுக் கட்டணம் 4 அணா)

★★★★★★★★★★★★

சிறை மீண்ட தோழர்கட்கு பாராட்டும் வரவேற்பும்

27—10—53ல் வளவனூர் தி. மு. கழக சார்பில் சிறை சென்று மீண்ட தோழர்கள் க. பழனியப்பன், வ. வேணுகோபால் முதலியவர்களுக்கு தோழர் ஏ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

தி. மு கழகப் பொறுப்பாளர் தோழர் ஏ கோவிந்தசாமி எம் எல். ஏ., அவர்கள் சிறை சென்று மீண்ட தோழர்களுக்கு மாலை அணிவித்தும் பாராட்டுதலை தெரிவித்தும், தற்போதைய அரசியல் நிலையையும், புதிய கல்வித் திட்டத்தையும், விளக்கிப் பேசிய பின்னர், டால்மியாபுரம்—கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தையும், புதுக்கிராம சம்பவம் ஒரு சில காலிகளின் வெறிச் செயல் என்று குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

கல்லக்குடி வழக்கு நிதிக்காக உண்டி மூலம் ரூ 8—4—3 வசூலாயிற்று; அப்பணத்தை, தோழர் கோவிந்தசாமி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திருப்பூர்

திருப்பூர், அக். 28—

திருப்பூர் 13, 14-வது வார்டு தி. மு கழகக் கிளையின் சார்பில் 25—10—53 மாலை 6 மணிக்கு, வாலிபாளையம் ஆரம்பப் பள்ளி அருகில், தோழர் ஏ. பாலராஜ் தலைமையில் சிறை மீண்ட தோழர்களுக்கு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், தோழர்கள் காசு, சேரலாதன், அ சா. இளங்கோ, கோபி. வி என். இராசு ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சோழமாதேவி

தி. மு கழக சார்பில், சிறை சென்று திரும்பிய தோழர்கள் இசக்கி, மாசாமை ஆகியோரைப் பாராட்ட 25—10—'53-ல், தோழர் அலிசேக்மைதீன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மந்திரன், சங்கரலிங்கம் இயக்கப் பண்பாடினர். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் நாராயணசாமி, 'பராசக்தி' தழுவல் 'நீதி மன்றக் காட்சி'யை நடத்திக், காண்பித்தார். பின்னர், தோழர் எம். ஆர். கணேசன், ஆச்சாரியாரின் அடக்குமுறையை கண்டித்தும், தி மு கழகப் போராட்டங்கள் குறித்தும் பேசினார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

குன்றை

ஓடைப்பட்டரை, வண்ணியம் பதி, நாச்சிநகர், வி பி. தெரு, ஆகிய தி மு கழகங்களின் சார்பில், 26—10—53-ல், ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை மீண்ட தோழர்களுக்கு குன்னூர் சவகர் பேட்டையில் ஓர் பாராட்டுக் கூட்டம் தோழர் ஒளியழகன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கோவை செழியன், தங்கவேலு ஆகியோர் பேசினர். பின்னர், அருப்புக்கோட்டை தோழர் எம். எஸ். இராமசாமி, தற்கால அரசியலைப் பற்றி விரிவுரையாற்றினார்.

புதுக்கோட்டை

ரயில் நிறுத்த அறப்போரில் ஈடுபட்டு மூன்று மாத சிறைத் தண்டனை பெற்ற தோழர்கள் கா. ஞானமுத்து, ஆர். முத்துகிருஷ்ணன் ஆகியவர்கள் 28—10—53ல், திருச்சி மத்திய சிறையிலிருந்து விடுதலையாயினர். அன்று மாலை 4 மணிக்கு தோழர்களை புதுக்கோட்டை ரயில் நிலையத்தில், கே. வீரையா, மு. இ. புதுமைநனி, மாணிக்கம், தங்கசாமி, மற்றும் கழகத் தோழர்களும், தி மு கழக சார்பில், மலர் மாலையிட்டு வரவேற்று, தேனீர் விருந்து அளித்தனர்.

வெங்கடாசலபுரம்

கல்லக்குடி போராட்டத்தில், இராம-சுப்பையா தலைமையில் கைதாகி, 3 மாத தண்டனை படைந்து, 15—10—53-ல் விடுதலையடைந்த தோழர் வி இராவணனுக்கு, 19—10—53-ல் தோழர் த. அரங்கசாமி தலைமையில் ஊர்வலமும், தோழர் வெ. க. ரெங்கராசன் தலைமையில் வரவேற்பும் நடைபெற்றன. அதுபோது, தோழர் இராவணன் இயக்கக்கொடியை ஏற்றி வைத்து, ஆட்சியாளரின் அடக்குமுறை பற்றியும், கல்லக்குடி போராட்டத்தைப் பற்றியும் சொற்பொழிவாற்றினார். தோழர் ரெங்கராசன், தி. மு. கழகத்தின் கோக்கங்களையும், அதன் அவசியத்தைப் பற்றியும் விளக்கினார்.

* * *

மேற்படி தோழருக்கு, இவ்வூர் திருவள்ளுவர் வாலிபர் கழக சார்பில், தோழர் ச மாணிக்கம் தலைமையில், வரவேற்பு அளிக்கப்பட்டது. ப. இராசமாணிக்கம் சொற்பொழிவாற்றினார்.

மாயூரம்

ஜூலை 15 அறப்போரில் ஈடுபட்டு, சிறை சென்று மீண்ட மாயூரம் வட்ட தி. மு. கழகத் தொண்டர்களை வரவேற்குமுகத்தான் 29—10—53-ல், மாயூரத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூறைநாடு வன்னியர் மடத்திலிருந்து புறப்பட்ட மாபெரும் ஊர்வலம், இலட்சிய ஒலிகளை முழங்கிக்கொண்டு; நகரின் முக்கிய வீதிகளின் வழியாக மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டம் நடக்குமிடத்தை வந்தடைந்தது.

கடைவீதியில் தோழர் ஆர். பழனிச்சாமி தலைமையில் பொதுக் கூட்டம் துவங்கியது. மாயூரம் வட்டத்திலிருந்து கலந்து கொண்ட 63 தொண்டர்களுக்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

முதற்கண், சிங்கைத் தோழர் தம்பி, கடல்கடந்த பர்மாவில் கழக வளர்ச்சியைப் பற்றியும், நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தியும் பேசினார்.

பின்னர் தோழர் என் வி சிங்கம் கழக நடவடிக்கைகள் குறித்து சொல்லாற்றினார்.

இறுதியாக தோழர் சி. பி சிற்றரசு அவர்கள், கல்லக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கக்கோரியும், ஆச்சாரியாரின் அடக்குமுறை தாண்டவத்தைக் கண்டித்தும் நீண்ட நேரம் பேசினார்.

மாயூரம் நகர தி மு கழகத்தின் சார்பாக கலந்துகொண்ட அறப்போர்த் தொண்டர்கள்:—

என். இட்டப்பா, என். சி மதியழகன், இரா. வளலுவதாசன் இரா. பனவி/செல்வா, சூடாமணி எம். எச் ஷரீப் ஏ செபாஸ்டின், பி டி. ராஜன், என். ஜெயராமன், கண்ணப்பன், என் கிருஷ்ணமூர்த்தி, ஆர். கிருஷ்ணமூர்த்தி, ஏ. ஜோசப், கே. பாண்டியன், என் சகாயராஜ், முத்துகிருஷ்ணன், என் விஜயராகவன், பி ஏ. பாஸ்கரன், கே. கோவிந்தசாமி, ஏ பாலு. ஜி மணி, எம். என் மணி, வி ராமசாமி, கே. ராமசாமி, தங்கவேலு மற்றும் மாப்படுகை, மங்கநல்லூர், பெரம்பூர், திருவிளையாட்டம், திருக்களாச்சேரி, பொறையார், கிடாமங்கலம், செம்பனார் கோவில், வானகர், மூதூர், வடவஞ்சார், காளி, தேரிழந்தூர் ஆகிய ஊர் தி மு கழகத்தைச் சேர்ந்த 35 மாயூரம் வட்ட தொண்டர்களுமாவர்.

பொதுக்கூட்டத்தில் கல்லக்குடி சதி வழக்குக்காக உண்டியல் குலுக்கி வசூலான ரூ 10—4—6-ம் தி மு கழகத் தலைமை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தி. மா. மு. கழக செயற்குழு தேர்தல்

★

அதிராம்பட்டினம்

அதிராம்பட்டினம் திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் 25—10—53-ல் அமைக்கப்பட்டது. அமைப்புக் கூட்டத்திற்கு பட்டுக்கோட்டை எம் எஸ். கலைச்செல்வன் தலைமை வகித்தார். தோழர்கள் க. அரங்கண்ணல் செயலாளராகவும், மா கோவிந்தராசன் துணைச் செயலாளராகவும், இரா. சாமிக்கண்ணு பொருளாளராகவும், கே. முகம்மது அலி விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

• • •

திருவாரூர்

தஞ்சை, தென்னார்க்காடு மாவட்ட அமைப்பாளர் வேண்டுகோளுக்கிணங்க, திருவாரூர் திராவிட மாணவர் முன்னேற்ற செயற் குழுவினராகத் தோழர்கள் டி. பி. டி. சம்பத் செயலாளராகவும், எஸ். கங்காதரன் துணைச் செயலாளராகவும், ஏ. சந்திரசேகரன் பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் வி. ஆர் சேரன், வி கோதண்டராமன், பி கே. வேலு, ஆர். கோவிந்தராசு, ஏ. செழியன், எஸ். சிவஞானம், ஏ மணிக்கம், கே சக்திவேல், பி. திருமாறன், இராமச்சந்திரன், டி. தமிழ்தாசன், என் கே. மணியன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

• • •

கோவை

21—10—53ல், கோவை அரசினர் கலைக் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் புதிய நிர்வாகக் குழு தேர்தல் கூட்டம், கல்லூரித் தோட்டத்தில் புலவர் தண்டபாணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் எம். முத்துரத்தினம் செயலாளராகவும், என் கோவிந்தசாமி துணைச் செயலாளராகவும், எஸ். வேலன் பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாக ப. தி. சாமி, ஜனார்த்தனம், சி. கோபால், தி. தண்டபாணி, சி. டி தண்டபாணி, நஞ்சுண்டசாமி, மாரியப்பன், ஆர். முத்துசாமி, நரசிம்மப்பெருமாள், சாமுவேல், எஸ். அரங்கநாதன், இரா. சென்னசாமி, என. பி. இராமசாமி, முருகநாதன், சி. பாலசுந்தரம், எஸ். சங்கரன், நாராயணசாமி கே. நல்லசிவம், இரத்தினவேலு மாவட்டப் பிரதிநிதிகளாக, தி தண்டபாணி, சி கோபால ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

• • •

எண்ணூர்

19—9—53-ல், தி. மா. மு கழகம், இவ்வூரில் துவங்கப்பட்டது அதுபோது, செயலாளராக எம். சூரியப் பிரகாசம்; துணைச் செயலாளராக ஈ. முத்துகிருஷ்ணன்; பொருளாளராக வி. சேது; செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் கோவிந்தசாமி, கோவிந்தன், வேணு, ரா. கிருஷ்ணன், கிருஷ்ணன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

உதகை

உதகை தி மா. மு. கழக செயற்குழு கூட்டம், இவ் ஊரில் புதிய செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தது. தோழர்கள்: ஈ. தாசன் செயலாளராகவும், தி. ரா. ரங்கன் துணைச் செயலாளராகவும், ப இராமகிருட்டிணன் பொருளாளராகவும், தி. தாமோதரன் துணைப் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பிரகாசா வருகையால் நாகையில் பிச்சைக்காரர்கள் பெற்ற பரிசு!

நாகை, அக். 31—

நாகூர் தி. மு. கழக 3-வது ஆண்டு விழாவும், சிறை சென்ற தோழர்களுக்குப் பாராட்டு விழாவும் 24—10—53ல், சிவன் தெற்கு வீதியில், தோழர் ஈ எம அனிபா தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் துவங்குவதற்கு முன், தோழர் ஈ. எம். அனிபா குழுவினர் தமிழிசை விருந்தளித்தனர்.

பின்னர், செயலாளர் தோழர் என். வி சபாபதி ஆண்டு அறிக்கையும் — வரவேற்புரையும் நிகழ்த்தினார். தலைவர் அவர்களால் சிறை சென்று திரும்பிய தோழர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, வாஞ்சூர், நாகை, நாகூர் தோழர்களால் பாராட்டு இதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் என் கே. சாமி அவர்கள், ஜூலை 15 போராட்டத்தின் விளைவுகளைப் பற்றியும், இன்றைய அடக்குமுறை ஆட்சியின் அலங்கோல நிகழ்ச்சி, புதிய கல்வித் திட்டம், நேருவின் இழிமொழிகள், கவர்னருக்குக் கருப்புக் கொடி ஆகியவை பற்றி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் தோழர் ஈ. எம் அனிபா, தற்கால அரசியல் நிலை, நகர சபையின் தவறான செயல்கள் பற்றியும், குறிப்பாக கவர்னர் வருகைக்காக—பாதைகள் பழுது பார்த்தல், பிச்சைக்காரர்களை அப்புறப் படுத்துதல், ஆடம்பர செலவினங்கள் ஆகியவைகளைக் கண்டித்துப் பேசினார்.

பின்னர், திரு.வி.க.மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும்; நாகை வட்டத்தில் சிறை சென்று மீண்ட தோழர்களைப் பாராட்டியும்; தலைவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும், கல்வித் திட்டத்தை வாபஸ் பெறும்படி அரசியலாரை வற்புறுத்தியும், கல்லக்குடி சதி வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கும் கழகத் தோழர்களை நிபந்தனையின்றி விடுவிக்கும் படியும், சதி வழக்கை வாபஸ் பெறும்படி அரசியலாரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆசிரியர்க் கழகங்களின் ஆண்டு விழா

சின்ன சேலம், கச்சிராயபாளையம், தியாகதுருகம், முடியனூர் கூத்தக்குடி, ஆகிய ஆசிரியர்க் கழகங்களைக் கொண்ட சின்னசேலம வட்ட ஆசிரியர்க் கழகங்களின் ஆண்டு விழா, சின்ன சேலத்தில். 25—10—53ல், தோழர் வி குணசராஜ், எம். ஏ, பி. டி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் தி. ச. முத்துசாமி, பி. ஏ., பி டி., "குழந்தைகளும் ஆசிரியர்களும்" என்பது பற்றிப் பேசினார்.

கல்விப் பொருட் காட்சியை, தலைவர் திறந்து வைத்தார்.

தலைவர் அவர்கள், முடிவுரையில், சமத்துவ வாழ்விற்கு ஆசிரியர்கள் அடிகோல வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பகுத்தறிவுப் படிப்பகம்

கள்ளிவலசு, அக். 26—

14—10—53ல், பகுத்தறிவு படிப்பக செயற்குழு கூட்டம் தோழர் ப. சூரன்தாசன் தலைமையின் கீழ் கூடியது. படிப்பக வரவு—செலவு பார்க்கப்பட்டது. பின்னர், புதுச் செயற் குழுவினராகத் தோழர்கள் பி. அப்பாச்சாமி தலைவராகவும், என். சுப்ரமணி துணைத் தலைவராகவும், எம். சுப்பிரமணி செயலாளராகவும், கே. கந்தசாமி துணைச்செயலாளராகவும், வி. ரங்கசாமி பொருளாளராகவும், ஆர் பழனிச்சாமி விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

என். ஜி. ஓ.-க்கள் மனைவியர் மாநாடு

தஞ்சாவூர் நவ 2—

சர்க்கார்சிப்பந்திகளின் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க, அரசாங்கம் பண உதவி அளிக்க வேண்டுமென்று, சர்க்கார் சிப்பந்திகளின் மனைவியர் வட்டத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக மாநாட்டில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டை, மைசூர் மேல் சபை உறுப்பினர் மோழியர் லட்சம்மா துவக்கிவைத்தார்.

என். ஜி ஓ-க்கள் தங்கள் குமார்த்தைகளின் கல்யாணச்செலவினை சமாளிக்க, சுலபமான தவணைகளில் திருப்பிக் கொடுக்கும் வகையில், வட்டியில்லாமல் ஆறு மாதச் சம்பளம் கடனாகக் கொடுக்க அரசியலாரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறதென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சின்ன சேலம் விவசாயிகள் சங்கம்

பொதுமக்களின் நலம் கருதியும், விவசாயிகளுக்கு தேவைப்படும் வசதிகளை அமைத்துக் கொள்ளவும் ஓர் சங்கம் இருத்தல் அவசியம் எனக் கருதி தோழர் அம்பாயிரம அவர்கள் இடைவிடாது உழைத்துக்கொண்டிருக்கும் முயற்சியினால் கடந்த 18—10—53 ஞாயிறு அன்று இவ்வூர் பொதுமக்களின் கூட்டம் மாரியம்மன் கோவில் மண்டபத்தில் பண்ணைக்காரர் பி. கே. கெங்காதர கவுண்டர் அவர்கள் தலைமையில் கூடியது. சங்கத்தின் நோக்கங்களையும், எடுத்து நடத்த வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் விரிவுரையாக தோழர்கள் எஸ்.பி ராமலிங்கம், ஆர். கோபாலகிருஷ்ணன், பி. என் விஸ்வநாதன், பி எஸ். அம்பாயிரம், ஏ அம்பாயிரம் ஆகியோர் விளக்கிப் பேசினார்கள்.

பின்னர் விவசாயிகள் சங்கம் நிறுவப்பட்டு, தலைவராக நா. சுப்பாசாரியார், உபதலைவராக க. ம. மூக்கன் அதிகாரி: செயலாளராக பி. எஸ். அம்பாயிரம், பொருளாளராக ஆர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெரியசாமி படிப்பகம்

விருதுநகர், அக். 27—

படிப்பக கமிட்டிக் கூட்டம் 25—10—53-ல நடைபெற்றது. அதுபோது, திரு வி. க மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், சென்ற ஆண்டு வரவு-செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டும், கல்லக்குடி, கல்லக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், மதுரையில் காங்கிரஸ் காலிகளால் தாக்கப்பட்ட தோழர் கருணைசாமிக்கு அனுதாபம் தெரிவித்தும். கல்லக்குடி சதி வழக்கு நிதிக்கு படிப்பகத்தின் சார்பாக பணம் திரட்டி அனுப்ப வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மூலக்கரைப்பட்டி வட்டார ஆதிதிராவிட ஐக்கிய சங்கம்

பாளையம், நவ. 2—

25—10—53-ல், தோழர் எம். ஆர் ஆறுமுகம் தலைமையில், நிர்வாகக்குழு கூடியது. அதுபோது, சங்க வளர்ச்சிக்கான நன்கொடைகள் அளித்த தோழர்கட்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஞானியார் நாராயண செட்டித் தெரு, திராவிடபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வி. என், கண்ணதுரை, எம்.ஏ.